மேல்குறிப்பிட்ட சட்டப் பிரிவு 7-ன் கீழ் ஏற்படுத்தப்பட்ட கிராம முன்சீப் கோர்ட்டுகளுக்கு மாற்றப்பட வேண்டும் என அப்போது ஆணையிடப்பட்டது. ஆனால், கிராம முன்சீப் கோர்ட்டுகளோ, அல்லது பஞ்சாயத்து நீதிமன்றங்களோ இது வரையில் ஏற்படுத்தப்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நிலம் தொடர்பான பிரச்சினையைத் தீர்க்கும் பணிகளை தற்போது மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் செய்து வருகின்றன.

திரு. ப. முத்துசாமி : தலைவர் அவர்களே, இதுபோன்ற கிராமப் பகுதிகளிலே ஏற்படுகின்ற வழக்குகளுக்கு கிராம அளவில் தீர்க்கக்கூடிய முறையை ஏற்படுத்தினாலொழிய அந்த வழக்குகள் நீண்டகாலம் நிலுவையில் இருந்து தீர்க்கப்படாமல் பெரும் அவதிக்கு ஆளாகக் கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆகையினாலே இனிமேலாவது பரிசீலித்து கிராம அளவிலே ஏற்படக்கூடிய சிறிய வழக்குகளை அங்கேயே தீர்க்கக்கூடிய ஒரு நல்ல முறையை இந்த அரசு ஏற்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே அரசியல் தலையீடு அதிகமாக ஏற்பட்ட காரணத்தால், ஏற்கெனவே இப்படி நடந்துவிட்ட நிலையில், ஏற்கெனவே நடந்துகொண்டு வந்து வழக்குகளின் நிலையில் ஆங்காங்கு உள் கோஷங்கள் ஏற்பட்டு ஊராட்சி மன்றங்களும் இரண்டு மூன்றாகப் பிரிந்து அந்தக் காரணத்தால் அந்த மன்ற நடவடிக்கைகூட தடைப்படுகின்றநிலை ஏற்பட்டதால்தான், அது இப்படி நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது என்று நான் அறிகிறேன். உள்ளபடியே மன்றம் பரிசீலிக்க வேண்டிய நிலை வந்தால், அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

பேரூராட்சிகளுக்கு நிதி ஈடு.

*6524. திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

அரசினால் அறிவிக்கப்பட்டுள்ள ஊதிய உயர்வினால் கூடுதல் செலவினை எதிர்நோக்கியுள்ள பேரூராட்சிகளுக்கு நிதி ஈடு செய்ய அரசு வழிவகை செய்யுமா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே,

ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகளின் நிதி நிலையைப் பெருக்குவதற்காக ஆலோசனை கூறும் பொருட்டு, அரசு திரு. ஏ. ஆர். தாமோதரன் அவர்களை தலைவராக கொண்ட வல்லுநர் குழு ஒன்றினை அமைத்துள்ளது. இக் குழு

TRUTH ALONE TRIUMPHS

1990 ஏப்ரல் 6]

பேரூராட்சிப் பணியாளர்களின் சம்பள செலவினத்தை அரசு ஏற்பது குறித்து பரிசீலிக்கக்கூடும் என்று கருதுகிறேன். மேற்படி வல்லுநர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் அதைப்பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வல்லுநர் குழுவினுடைய அறிக்கை என்றைக்கு வரும், அது எப்போது அமல்படுத்தப்படும் என்பதெல்லாம் ஒருபுறம் இருக்க, இடைக்கால நிவாரணமாக, அரசு எவ்வளவோ நல்ல மனதுடன் அரசு ஊழியர்களாக, உள்ளாட்சி நிறுவனத்திலே இருப்பவர்களை, அதுவும் பேரூராட்சி நிர்வாகத்திலே இருப்பவர்களை ஏற்றிருக்கிறது. ஊதிய உயர்வும் தந்திருக்கிறது. அந்த இக்கட்டுகளை சமாளிக்க முடியாமல் Self Generating Funds இல்லாமல் அந்தப் பேரூராட்சிகள் தத்தளித்துக் கொண்டு இருக்கிற நேரத்தில், ஒரு இடைக்கால நிவாரணமாக—குறைந்தது பஞ்சப்படியையாவது, ரிலீஸ் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, ஒரு காரியத்திற்காக ஒரு குழுவை அமைத்துவிட்டு, அதற்குப் பிறகு இடையிலே குழுவினுடைய முடிவு தெரியாத வரையில், அப்படிச் செய்வது நியாயம் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வீ. பெ. துரைசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்): தலைவர் அவர்களே, பேரூராட்சியில் பணியாற்றுகின்ற அலுவலர்களுக்கு, மாதா மாதம் சம்பளம் வழங்க முடியாத நிலையில் சில பேரூராட்சிகள் இருக்கின்றன. அத்தகைய பேரூராட்சிகள் வளர்ச்சிப் பணிகளில் கூட ஈடுபட முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் தமிழக அரசு அந்தப் பேரூராட்சிகளை கலைக்கின்ற திட்டம் ஏதாவது உண்டா? அல்லது பேரூராட்சிகளுக்கு வருமானத்தைப் பெருக்குகின்ற வழிவகைகள் அரசு மூலமாக காணப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : தலைவர் அவர்களே, செலவு அதிகமாகிறது. அதிலும் ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியவில்லை என்பதற்காக எந்தப் பேரூராட்சி மன்றமும் நிச்சயமாக கலைக்கப்படமாட்டாது. ஆனால் அப்படி ஒரு சங்கடமான சூழ்நிலை ஏற்படும்போது, அப்படி அலுவலர்கள் சம்பளம் பெறாமல் கஷ்டநிலைக்கு வருவார்களானால், குழுவின் பரிந்துரை கிடைப்பதற்கு தாமதம் ஆகுமானால், அதைப்பற்றி ஒரு இடைக்காலமாக அப்போது யோசிக்கலாம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டி. 2 53-88—4